பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

27 08 2025 WEDNESDAY 6 45 AM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலக கோப்பை செஸ் போட்டிகள் இந்தியாவில் நடைபெறுவது மிகுந்த பெருமிதம் அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. அரசு நிர்வாகம் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுவதில், தகவல் அறியும் உரிமைச் சட்டம் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 66 ஆயிரம் புதிய தொழில் முனைவோர் உருவாக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு. தா.மோ. அன்பசரன் தெரிவித்துள்ளார்.

4. காவிரியில் கர்நாடக அரசு, தமிழகத்திற்கு வழங்க வேண்டிய மாதாந்திர தண்ணீரின் அளவை உறுதி செய்யுமாறு தமிழக அரசு, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை வலியுறுத்தியுள்ளது.

5. கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் திட்டத்தை மறுஆய்வு செய்ய வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மாநில அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

உலக கோப்பை செஸ் போட்டிகள் இந்தியாவில் நடைபெறுவது மிகுந்த பெருமிதம் அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த ஆண்டுக்கான உலக கோப்பை செஸ் போட்டிகள் கோவாவில் வரும் அக்டோபர் 30ஆம் தேதி முதல் நவம்பர் 27ஆம் தேதிவரை நடைபெறும் என்று சர்வதேச செஸ் கூட்டமைப்பு அறிவித்திருப்பதை பகிர்ந்துள்ளார்.

சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தப் போட்டிகள் இந்தியாவில் நடைபெறவுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய இளைஞர்களிடையே செஸ் விளையாட்டு, பிரபலமடைந்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

உலக கோப்பை செஸ் போட்டிகள், பிரமாண்டமாக அமைவதுடன் உலகின் முன்னணி வீரர்களின் திறமையை வெளிப்படுத்தும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

அரசு நிர்வாகம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வுடன் செயல்படுவதில், தகவல் அறியும் உரிமைச் சட்டமும், தகவல் ஆணையங்களும் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தகவல் ஆணையங்களின் தேசிய கூட்டமைப்பின் 15வது ஆண்டு கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர், பணியாளர் நலத்துறை மேற்கொண்ட சீர்திருத்தங்கள் காரணமாக, ஆயிரத்து 600க்கும் அதிகமான தேவையற்ற விதிமுறைகள் நீக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

மேலும், கல்விச் சான்றிதழ் உள்ளிட்ட ஆவணங்களில் அரசு அதிகாரிகளின் சான்றொப்பம் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசு துறைகளின் பணிநியமனங்கள், வெளிப்படைத் தன்மையுடன், தகுதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்ய, குறிப்பிட்ட சில பணியிடங்களுக்கு நேர்முகத் தேர்வு ரத்து செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான மின்னணு இதழையும் திரு. ஜிதேந்திர சிங் வெளியிட்டார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் கடந்த நான்காண்டுகளில் 66 ஆயிரம் புதிய தொழில் முனைவோர் உருவாக்கப்பட்டுள்ளதாக மாநில சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பசரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் மாவட்ட தொழில் மைய பொதுமேலாளர்களின் ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், இத்துறை வாயிலாக புதிய தொழில் தொடங்க 5 ஆயிரத்து 490 கோடியே 80 லட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டிருப்பதாக கூறினார்.

இதில் 2 ஆயிரத்து 133 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கான இலக்கினை வரும் டிசம்பர் மாதத்திற்குள் எட்டும் வகையில், பணிகளை விரைவுபடுத்துமாறும் அதிகாரிகளை திரு. தா.மோ. அன்பரசன் அறிவுறுத்தினார்.

>>>>>><<<<<<

காவிரியில் கர்நாடக அரசு, தமிழகத்திற்கு வழங்க வேண்டிய மாதாந்திர தண்ணீரின் அளவை உறுதி செய்ய வேண்டும் என்று தமிழக அரசு, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை வலியுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் காவிரி ஆணையத்தின் தலைவர் திரு. எஸ்.கே. ஹல்தர் தலைமையில் நடைபெற்ற 43வது கூட்டத்தில் தமிழக நீர்வளத்துறை செயலாளர் திரு. ஜெயகாந்தன் உள்ளிட்ட அதிகாரிகள் காணொலி வாயிலாக கலந்து கொண்டனர்.

அப்போது, மேட்டூர் அணை இந்த ஆண்டு 5வது முறையாக அதன் முழுக்கொள்ளளவை எட்டி, தற்போது 93 புள்ளி நான்கு ஏழு டிஎம்சி அளவிற்கு நீர் இருப்பு உள்ளதை அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

கர்நாடக அணைகளின் நீர்இருப்பு மற்றும் நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால், வரும் செப்டம்பர் மாதத்திற்கான 36 புள்ளி ஏழு ஆறு டிஎம்சி தண்ணீரை

கர்நாடகம் திறந்து விடுவதை உறுதி செய்யுமாறும் தமிழக அதிகாரிகள் கேட்டுக் கொண்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

தமிழகத்தில் உள்ள சார்பதிவாளர் அலுவலகங்களில் நாளையும், நாளை மறுநாளும் பத்திரப் பதிவுக்கு கூடுதல் டோக்கன் வழங்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

ஆவணி சுபமுகூர்த்த தினங்களில் அதிக அளவில் ஆவணப்பதிவு நடைபெறும் என்பதால், பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, கூடுதல் டோக்கன்களை ஒதுக்கீடு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒரு சார்பதிவாளர் அலுவலத்திற்கு கூடுதலாக 50 டோக்கன் வீதம் ஒதுக்குவதுடன், அதிக அளவில் ஆவணப்பதிவு நடைபெறும் அலுவலகங்களில் தட்கல் முன்பதிவு டோக்கனையும் கூடுதலாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதாக பத்திரப்பதிவுத்துறை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

கோயம்புத்தூர் மாஸ்டர் பிளான் 2041 மூலம், நிலப்பரப்புகளை வேறு வகைப்பாட்டிற்கு மாற்றும் திட்டத்தை மறுஆய்வு செய்ய வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நகர ஊரமைப்பு மற்றும் உள்ளூர் திட்ட குழுமத்தால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த மாஸ்டர் பிளான், பல்வேறு முறைகேடுகளுக்கு வழிவகுக்கும் வகையில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து, பொதுமக்களின் கருத்தை முழுமையாக கேட்காமல் குளறுபடிகளுடன் மாஸ்டர் பிளான் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

குடியிருப்பு நில வகைப்பாட்டில் உள்ள நிலத்தினை, விவசாயம் மற்றும் தொழில் பிரிவிற்கு மாற்றியிருப்பதன் காரணமாக, வளர்ந்த தொழில் நகரமான கோவை நகரில், நில மதிப்பீட்டுத் தொகை அதிகரிக்கும் என்பதால், உரிய திருத்தங்கள் செய்து, புதிய திட்டத்தை வெளியிடுமாறும் திரு. எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தொகுதி, சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. கலிலூர் ரஹ்மான் மறைவுக்கு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தியில், பள்ளப்பட்டி பேரூராட்சி தலைவராகவும், சட்டப்பேரவை உறுப்பினராகவும், சிறப்பாக பணியாற்றியதன் மூலம், மக்களின் நன்மதிப்பையும், சிறுபான்மையினரின் நம்பிக்கையை பெற்றவராகவும் திகழ்ந்தவர் கலிலூர் ரஹ்மான் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

தோட்டப் பயிர்களின் விற்பனையை அதிகரித்து, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, விருதுநகர் மாவட்டத்தில் காய்கறி சிறு வியாபாரிகளுக்கு 30 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான மானிய உதவியுடன் கூடிய வண்டிகள் வழங்கப்படுவதாக தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திருமதி. வாசுகி தெரிவித்துள்ளார்.

(சவுண்ட் பைட் – வாசுகி 25 செகண்ட்ஸ்)

இந்த வண்டிகள், தங்களது வாழ்வாதாரத்திற்கு பேருதவியாக உள்ளது என்று பயனாளிகள் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

லித்துவேனியாவின் புதிய பிரதமராக தற்போதைய அமைச்சர் திருமதி. Inga Ruginiene-யை நியமிக்க அந்நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

>>>>>><<<<<<

வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த இந்தியா – தென்னாப்பிரிக்காவும் முடிவு செய்துள்ளன.

>>>>>><<<<<<

காற்றாலை மின்உற்பத்தியில் இந்தியா உலகின் 3-வது மிகப் பெரிய நாடாக உருவெடுத்துள்ளது.

>>>>>><<<<<<

சந்திரகிரகணத்தை ஒட்டி, திருப்பதி ஏழுமலையான் கோவில் அடுத்த மாதம் 7ஆம் தேதி பிற்பகல் 3.30 மணி முதல், 8ஆம் தேதி அதிகாலை 3 மணிவரை மூடப்படும் என்று கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

காஞ்சிபுரத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை கைத்தறித்துறை அமைச்சர் திரு. காந்தி தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

சென்னை தீவுத் திடலில் கட்டப்பட்டு வரும் நவீன கண்காட்சி மையப் பணிகளை மாநில அமைச்சர் திரு. சேகர்பாபு நேற்று ஆய்வு செய்தார்.

>>>>>><<<<<<

திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப்பெரும்புதூர் சட்டக் கல்லூரியில் மாணவர் சேர்க்கைக்கான ஆணைகளை மாநில அமைச்சர் திரு. நாசர் வழங்கினார்.

>>>>>><<<<<<

ஈரோடு மாவட்டம். சத்தியமங்கலம் அருகே. கரும்பு தோட்டத்தில் புகுந்த மலைப்பாம்பை, தீயணைப்புத் துறையினர் மீட்டு, வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

>>>>>><<<<<<

கோவை, மதுக்கரை பகுதியில் தீவிரவாத எதிர்ப்புப் படையினர் மேற்கொண்ட வாகன சோதனையில், இரண்டு டன் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ராமேஸ்வரம், ராமநாத சுவாமி திருக்கோவில் உண்டியல் காணிக்கையாக ஒரு கோடியே 67 லட்சம் ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

பீகார் மாநிலம், Rajgir-ல் நடைபெறவுள்ள ஆசிய கோப்பை ஹாக்கி சாம்பியன் போட்டிக்கான டிக்கெட்டுகள் இலவசமாக வழங்கப்படும் என்று இந்திய ஹாக்கி சம்மேளனம் அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள 33 மாவட்டங்களிலும் கிரிக்கெட் விளையாட்டு அரங்கங்களை கட்ட அம்மாநில கிரிக்கெட் சங்கம் முடிவு செய்துள்ளது.

>>>>>>END<<<<<<